

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்,

உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் மகாதேவா சதீஸ்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**31.01.2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்,

உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# மகாதேவா சதீஸ்


அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

31.01.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்,
அன்புச் செல்வமாய்,
இனிய பண்பின் பிறப்பிடமாய்,
விளங்கி இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
குலக்கொழுந்தின்
பாதத் திருவடிகளுக்கு
இந்த ஆத்மா சாந்தி மலர்
சமர்ப்பணம்.

ஓம் சாந்தி!

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு 28 05 1978

உதிர்வு 18 12 2004

# அமரர் மகாதேவன் சதீஸ் அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

தாரண வாண்டு தழைத்தநல் மார்கழியின்
பூரண பூர்வபக்கத் திதிசப்தமி- ஏரணனாம்
மகாதேவா மகன்சதீஸ் மண்ணுலகை
விட்டீசன்புகலடியைச் சேர்ந்திட்ட நாள்.

AVER MEDIA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N.M.Graphi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# ஆசைப்பிள்ளை மகாதேவா

**பிறப்பு**
1940.04.26

**இறப்பு**
1996.12.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்டைதீவு சிறுப்புலம்

# கந்தசாமிப் பெருமான் துதி

அந்தணர் அருமறையும் அடியவர் திருமுறையும்
அரோகரா வெனவொலியும் கூடும்
செந்தழல் சேர்ந்த பொருளாய் நாம்செய்
தீவினைப் பயன்கள் ஓடும்
அந்தமில் கீர்த்திமிக்க அழகுசேர் மண்டைதீவில்
ஆலயங் கொண்டு அருளும்
சிந்தையி லினிக்குமெம் சிறப்புலக் கந்தாவுன்
சேவடிகள் போற்றி! போற்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



**திருச்சிற்றம்பலம்**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம ன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

பரமனை மதித்திடாப் பங்கய ஆசனன்
ஒருதலை கிள்ளியே ஒளிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புலிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோ கதிர்காமப்பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம்சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவநீதி விளங்குக உலகமெலாம்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் மகாதேவா சதீஸ்

## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சிவபூமி என்று திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கைத் தீவின் சிரசாக விளங்குவது யாழ்ப்பாணப் பிரதேசம். யாழ்ப்பாண நகரின் தென் கிழக்குப் பக்கமாகச் சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சிற்றூர் மண்டைதீவு ஆகும். ஏர்வளமும், கடல்வளமும் மிக்குற்று, கலைகளும், கல்வியும் வளர்கின்ற சப்ததீவுகளில் ஒன்றாக அது விளங்குகிறது. அத்தகைய அரும்பதியில் புகழ்பூத்த சைவவேளாள மரபில் தோன்றிய ஆசைப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியின் இல்லற வாழ்வில் பேரின்பநாதன், வாமதேவா, மகாதேவா, சரஸ்வதிதேவி ஆகிய பிள்ளைகளைப் பெற்று மகிழ்வுற்றனர். அவர்களுள் மூன்றாவது மகனான மகாதேவாவின் இல்லறத் துணைவியாக, அவ்வூரின் புகழ்மிக்க குடும்பத்தைச் சேர்ந்த தம்பியப்பா - சின்னம்மா தம்பதிகளின் மூன்றாவது மகள் தனலட்சுமி அமைந்து குடும்பச் சிறப்பையும், இல்லற மகிமையையும் பேணிவந்தார். மகாதேவா - தனலட்சுமி ஆகியோரது இல்லற வாழ்வின் இனிய கனிகளில் மூத்ததாகவும், ஏகபுத்திரனாகவும் அமரர் சதீஸ் விளங்கினார். 28.05.1978 அன்று பிறந்தவர் அவர். அவருக்குப் பின்னால் தர்மினி, ராதிகா, ரேணுகா, அமிர்தகலா ஆகிய தங்கைமார் நால்வர் பிறந்தனர். தாய் வழியிலும், தந்தை வழியிலும் அனைவருக்கும் செல்லப் பிள்ளையானார் அமரர் அவர்கள்.

ஆரம்ப இடைநிலைக் கல்வியை மண்டைதீவு மகாவித்தியாலயத்திலும், க.பொ.த (உயர்தர) வகுப்பினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் கற்றவர் அமரர் சதீஸ் அவர்கள். எளிமை, இனிமை, இரக்கம், குடும்பபாசம் ஆகிய நற்பண்புகளுடன் வளர்ந்து இளைஞரானார். 1995 ஆம் ஆண்டின் இறுதியில் யாழ்ப்பாண மாவட்டத்து மக்களில் அனேகமானோர் வன்னிப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்த போது, சதீஸின் குடும்பமும் வன்னி சென்று ஸ்கந்தபுரத்தில் வசிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியிலிருக்கும்போது சதீஸின் தந்தையார் மகாதேவா அவர்கள் 26.12.1996 இல் நோய் காரணமாக மரணமடைந்தார். இந்தத் துன்பத்தைத் தாங்கமுடியாத நிலையில், சிலகாலத்தின் பின்னர் சதீஸ் மற்றும் குடும்பத்தினர் யாழ்ப்பாணம் திரும்பினர். சொந்த ஊருக்குச் சென்று வசிப்பதில் பல்வேறு சிரமங்கள் இருந்தமையினாலும், சகோதரி மாரின் படிப்பின் முக்கியத்துவம் கருதியும் சதீசும் குடும்பத்தினரும் கொக்குவிலில் வசிந்து வந்தனர். க.பொ.த உயர்தரத்தில் கணிதப்பிரிவில் சித்தியடைந்தும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத நிலையில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந்தார் அமரர் சதீஸ். இருப்பினும் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் 2001 ஆனி மாதம் "உதயன்" பத்திரிகை நிறுவனத்தில் ஒப்புநோக்குநராகப் பணியாற்றத் தொடங்கினார். தான் பணிபுரியும் நிறுவனத்தில் சகலராலும் அன்புடன் நேசிக்கப்பட்டார். அரசாங்க உத்தியோகங்களுக்கு விண்ணப்பங்களையும் அனுப்பிவந்தார். தனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், தன்னுடன் படித்த சக மாணவர்கள், நண்பர்கள் தான் வேலை பார்க்கும் நிறுவனத்தினர், குடும்பத்தவர், ஊரவர், அயலவர் எனச் சகல தரப்பினரும் அன்போடு பழகத்தக்க பண்புள்ளவராகத் தனது அணுகுமுறையினை வளர்த்து வந்தார்.

அமரர் சதீஸ் இளமையில் பெரியதாயாரும் ஆசிரியையுமான நாகலட்சுமியின் வீட்டிலேயே வளர்ந்தவர். தந்தையாரின் மறைவின் பின்னரே குடும்பப் பாதுகாப்புக்காகத் தாயார், சகோதரிமார், பெரிய தந்தை, மாமி ஆகியோருடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்து வந்தார். அவரது குடும்பப் பாரம்பரியத்தில் பலர் அரச உத்தியோகத்தர்களாகப் பணிபுரிந்தவர்கள். சதீசின் மூத்த சகோதரி தர்மினி ஏ.எல் வகுப்பில் விஞ்ஞானப் பிரிவில் சித்திபெற்றவர். தற்போது கொழும்பில் கணினி விஞ்ஞானம் (இலண்டன்) படித்து வருகிறார். இரண்டாவது சகோதரி ராதிகா வயம்ப பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார். மூன்றாவது சகோதரி ரேணுகா ஏ.எல் சித்திபெற்றபின் வெளிவாரியாக வர்த்தகமாணி நெறியினைக் கற்று வருகிறார். நான்காவது சகோதரி அமிர்தகலா யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த உயர்தர கலைப் பிரிவில் கற்றுவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் மனோன்மணி அம்மனிடம் நிறைந்த பக்திகொண்ட அமரர், அந்த ஆலயப் பணிகளில் ஈடுபடுபவர். தான் மரணித்த அன்றும் அங்கு சென்று மனோன்மணி அன்னையை வணங்கி வந்துள்ளார். எல்லோருக்கும் நல்லவராக விளங்கிய சதீசை, இறைவன் தன்னிடம் மிக விரைவாக அழைத்துக்கொண்ட நாள் 18.12.2004 ஆகும். அவர் எதிர்பாராத விதத்தில் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து மரணமானார். தன்னை நம்பியிருந்த குடும்பத்தினர் அனைவரையும் துயரக்கடலில் மிதக்கவிட்டு, இறைவனின் திருவடிகளில் அமைதி கண்டுவிட்டார். இறைவனின் திருவிளையாடலை யார் அறியவல்லார்? "நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும் பெருமையுடைத்திவ் வுலகு" என்கிற திருக்குறளை அமரர் சதீசின் ஆன்மா சாந்தியடையை எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மகாதேவா சதீஸ் அவர்களின்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையுரை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் மகாதேவா சதீசின் எதிர்பாராத திடீர்மரணம் எங்கள் எல்லோருக்கும் தாங்கமுடியாத கவலையைத் தந்துள்ளது. இறந்த அன்று காலை தனது தயார் தனலக்சுமியுடன் எமது ஆலயத்திற்கு திருவெம்பா பூசைக்கு வந்து வணங்கிச் சென்றார். அவரது மறைவு நம்பமுடியாமல் உள்ளது. நான் ஆலயத்தில் ஏதாவது தொண்டு செய்யும்படி கேட்டால் முகம் சுளிக்காது செய்து தரும் சுபாவம் கொண்டவர் சதீஸ். எல்லோரது மனமும் நோகாமல் நடப்பவர். இவ்வாறான சுபாவம் உடைய சதீசை இழந்த குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறி அவரது ஆத்மா சாந்தியடைய நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பிகையின் பாதங்களைப் பணிகின்றேன்.

இங்ஙனம்
**ச.ஸ்ரீசந்தானக்குருக்கள்**
பிரதமகுரு,
நந்தாவில் அம்மன் தேவஸ்தானம்,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிவழி சென்றது ஏனோ?

மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மகாதேவா அண்ணரின் மூத்தபுதல்வர் சதீஸ் (27 வயது) அகால மரணமடைந்து விட்டார் என்ற செய்தியை உள்ளூர் நாளிதழ் ஒன்றில் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளேன்.

மண்டைதீவில் இவரது அயலில் வசித்து வந்தவர் என்ற வகையில் அமரர் மகாதேவா சதீஸ் என்பவரை இளமைக் காலத்தில் இருந்து நான் அறிவேன். இவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மாணவனாகக் காணப் பட்டவர். அத்துடன் இறைபக்தனாகவும் விளங்கினார்.

இவர் மண்டைதீவு மக்களோடு அன்பாகவும் பண்பாகவும் பழகி அனைவரது விருப்பத்திற்குரியவராகவும் விளங்கி வந்தவர். மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இவர் பெற்றோர்களுடன் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச் சென்று வசித்தபோது, இவரது தந்தையார் மகாதேவா அண்ணர் அங்கு நோயினால் மரணமாகிவிட்டார்.

தந்தையின் பிரிவை தாங்கமுடியாமல் அங்கிருந்து கொக்குவில் பதிக்கு வந்து தாயுடனும், சகோதரர்களுடனும் வசித்துவரும் வேளையில் இவர் கிணற்றில் விழுந்து அகாலமரணமடைந்துள்ளார். சோதனை மேல் சோதனை என்ற நிலையை மகாதேவர் அண்ணர் குடும்பத்துக்கு ஏற்படுத்தியுள்ளது. மனித வாழ்க்கை என்பது நீர்க்குமிழி போன்றது என்பதற்கு இவரது அகாலமரணம் உதாரணமாகிவிட்டது.

அமரர் சதீஸ் பெற்றோர்கள் செய்த தவப்பயனாக இவ்வுலகில் மானிடராகத் தோன்றி 27 வருடங்கள் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று தாயாரையும் உடன் பிறப்புக்கள் உற்றார், உறவினர்களைக் கண்ணீர் சிந்தி கதறியழ வைத்துவிட்டு மீளாத்துயிலில் மூழ்கிவிட்டார்.

இவரது பிரிவு குறித்து கண்ணீர் சிந்தும் இவரது குடும்பத்தினருக்கு எனது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**மண்டைதீவு - 6.**
**12.11.2005**

**என்.இராமச்சந்திரன் ஜே.பி**
முன்னாள் செயலாளர்,
மண்டைதீவு பிரஜைகள் குழு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்குற்றீர் சொல் ஐயா!

வேரற்ற மரமாக நாங்கள் விழுந்து கிடக்கின்றோம்
நீரற்ற பயிராக நெஞ்சந் துடிக்கின்றோம்
ஊரும் உறவும் உள்ளதெலாம் நீயென்றிருந்தோம்
ஆர்பொறுப்பார் உன்பிரிவை! ஆற்றுவார் இல்லையையா!

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு நீயல்லவா?
எங்கள் நம்பிக்கையின் நட்சத்திரம் நீயல்லவா?
எங்கள் இன்பமும் துன்பமும் உனக்காகத்தானே!
எங்களை ஏமாற்றி எங்குற்றீர் சொல்ஐயா!

செல்ல மொழிபேசி சிறகுகள் விரித்தாயே!
செல்லப் பிள்ளையாய் சேர்த்துவைத் திருந்தோமே!
நல்ல காலம் வருமென்றே நம்பியிருந்தோமே!
நாதியற்றுப் போனேமே! இனிநாம் என்செய்வோம்!

அன்னை மடிதேடி அரவணைக்க வாருமையா!
அன்புள்ள தங்கையர்க்கு ஆறுதலைத் தாருமையா!
உன்னை நினைந்துருகும் உறவுகளைப் பாருமையா!
உனையிழந்து வாடுகின்றோம் உற்றதுயர் தீருமையா!

இங்ஙனம்
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோராலும் விரும்பப்பட்டவர்

எமது பணியாளர்களில் ஒருவரான மகாதேவன் சதீஸைத் திடீரென இழந்தபோது 'உதயன்' குடும்பமும் ஆற்றமுடியாத சோகத்தில் ஆழ்ந்தது.

குறுமுனி போன்ற தோற்றமும் எப்போதும் சுறுசுறுப்பான சுபாவமும் கொண்ட ஓர் இளைஞனாக 'உதயன்' பத்திரிகை நிறுவனத்துக்குள் அடியெடுத்து வைத்தவர் சதீஸ். முகத்தில் புன்சிரிப்புடன் கூடிய சாந்தமும் அடக்க சுபாவமும் அவரை எல்லோராலும் விரும்பப்படும் ஒருவராக்கின. அவரது பணிக்காலம் மிகக்குறுகியது எனினும், சக பணியாளர்களோடு மிகுந்த சிநேகபூர்வமான உறவை ஏற்படுத்தி, பத்திரிகையை வெளியிடுவதற்கான குழுமச் செயற்பாட்டுக்குள் தன்னையும் இணைத்துக் கொண்டு மிகுந்த கடமை உணர்டவுடனும் பொறுப்போடும் கடமைபுரிந்தவர் அவர்.

ஒரு நாளேட்டின் வெற்றி, அதனைப் பிந்திய செய்திகளுடன் உரிய தரம் பேணி நேரகாலத்துடன் வாசகர்களின் கரங்களில் சேர்ப்பதிலேயே தங்கியுள்ளது.

பத்திரிகையின் பிரசவத்துக்கான நாளாந்தப் பணிகளில் அவசரத்தையும் அவசியத்தையும் வேகத்தின் தேவையையும் உணர்ந்திடாமல் கடமையாற்றுவது என்பது சாத்தியமானதல்ல.

அந்தவகையில், ஆசிரியபீடப் பணிக்குப் பக்கத்துணையான ஒப்பு நோக்குநர் பிரிவில் கடமையாற்றுவோரின் திறமையும் வேகமும் ஒத்துழைப்பும் பத்திரிகையைச் செவ்வனே அச்சிட்டு வெளியிடுவதற்கு அவசியமானவை.

இதை மிகக் குறுகிய காலத்தில் உணர்ந்து அறிந்தவராகத் தனது கடமையை நிறைவுசெய்து வந்தவர். சதீஸ்.

பயிலுநர் நிலையில் இருந்த சமயத்திலே முதிர்ந்த ஒப்புநோக்குநர் களுக்கான குணாம்சங்கள், சிறப்பியல்புகள் அவரிடம் வெளிப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளையும் ஏனைய விடயங்களையும் 'அறுத்து உறுத்து' வாசித்து மனதில் ஊன்றிப் பதித்து அவற்றின் பொருள் உணர்ந்து அவர் செய்யும் ஒப்புநோக்குதல் பணி என்னை மிகவும் கவர்ந்தது. பொறுப்புணர்வுப் பற்றும் விசுவாசமும் இல்லாத இன்றைய இளைஞர்கள் மத்தியில் அவர் மிகவும் வேறுபட்டு நின்றதால், மதிக்கப்பெறத் தகுதியடைந்தார். பத்திரிகையில் வெளியாகும் ஒவ்வொரு சொல்லும் தவறின்றி அச்சாக வேண்டும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பணிபுரிந்தவர் சதீஸ்.

அவரது சடுதியான பிரிவு அவரது உறவினர்களைப் போன்றே எங்களாலும் ஆற்றிக்கொள்ள முடியாத - தேற்றிக்கொள்ள முடியாத - துயரமாகிவிட்டது. பத்திரிகைப் பணியில் உயர்ந்து வளர்ந்திருக்க வல்லமை மிக்க இளங்குருத்து ஒன்று கருவிட்டது.

இளம் வயதில் உலக வாழ்வை முடித்துக்கொண்ட மகாதேவன் சதீஸின் ஆன்மா, ஆண்டவன் பாதக் கமலங்களில் சாந்திபெற வேண்டி, எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சி நிறைவு செய்கின்றேன்.

**ம.வ.கானமயில்நாதன்**
பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற செயல்வீரன்

# திரு.மகாதேவன் சதீஸ்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வாக்கிற்கு உதாரண புருஷராக வாழ்ந்த ஒரு பண்பாளன் இன்று எம்மைச் சோகத்தில் ஆழ்த்தி விட்டுச் சென்று மறைந்துள்ளார். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என்று தனது மகவு கல்வியில் சிறந்து, பின் தொழிலில் தன் திறமையை வெளிக்கொணர்வது கண்டு பூரிப்படைந்திருந்த தாயின் கனவு "நீர்க்குமிழி வாழ்வாக" மாறிவிட்டமை எமக்குத் தாங்கொணா சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

திரு.மகாதேவன் சதீஸ் 2001 ஆம் ஆண்டு 'உதயன்' பணிமனையில் எம்மோடு கடமையில் வந்து பயிலுநராக இணைந்தார். மிகவும் விரைவாக இவர் தனது தொழிலைக் கற்றுக்கொண்டார். கடமையில் மிகுந்த கண்ணியத் துடனும் தான் ஏற்ற கடமையை மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்கின்ற ஒரு செயல்வீரனாக வாழ்ந்து காட்டியவர் திரு.மகாதேவன் சதீஸ். "நட்பும் தயவும் கொடையும் பிறவிக்குணம்" என்ற ஔவையின் வாக்கிற்கு அமைவாக பிறப்பிலேயே மற்றவர் மீது இரக்க சிந்தையுடையவராகவும், நட்புடனும் அன்புடனும் பழகுபவராகவும் வாழ்ந்த பெரியார். இவர் உருவத்தால் சிறியவர் என்றாலும் அறிவால் பெரியவர் என்றே கூறவேண்டும். பேசுகின்றபோது நகைச்சுவை ததும்ப எவரையும் புண்படுத்தாவண்ணம் மிகவும் நாசூக்காகப் பேசுவார்.

மிகவும் குறுகிய காலங்கள் எம்மோடு வாழ்ந்தாலும் இங்கு பணியாற்றுகின்ற சகல ஊழியர்களின் உள்ளங்களிலும் இடம்பிடித்து, இன்றும் கூட எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார். இங்கு இவர் பணியில் இணைந்து மூன்று வருடங்களில் ஒருநாள்கூட 'லீவு' எடுத்ததில்லை நிரந்தரமாக ஓய்வெடுப்பதற்காகத்தான் இவர் மூன்று வருடங்களும் ஓய்வெடுக்காமல் கடமையாற்றியுள்ளாரோ என ஐயுறவைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இறந்துவிட்டார் என்று நாம் நினைக்கவில்லை. அவர் ஓய்விலே சென்றுவிட்டார், தற்போது எம்மோடு கூடவே வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஓய்வு முடிந்ததும் மீண்டும் கடமையை வந்து ஏற்பார் என்று எமது உள்ளத்தைத் தேற்றிக்கொண்டே நாம் கடமையாற்றுகின்றோம்.

"பிறப்பவர்கள் எல்லாரும் இறப்பது நியதி" என்ற வாக்கை சிரமேற் கொண்டு எமது உள்ளத்தையும் அவர்தம் குடும்பத்தினரின் உள்ளங் களையும் ஆற்றுப்படுத்தி அவரது ஆன்மா இறைவனின் திருப்பாதங்களை யடைந்து பேரின்பப் பெருவாழ்வடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!**

**தெல்லியூர் சி.ஹரிகரன்**
சக ஒப்புநோக்குநர்கள் சார்பாக,
உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாதி வழியில் ........
# கலைந்துபோன அழகிய கனவு......"

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்

பெருமை உடைத்து இவ்வுலகு"

நீலக்கடல் நடுவே நிமிர்ந்து நிற்கும் தலைத்தீவாம் மண்டைதீவின் மத்தியில் 'சிறுப்புலம்' என்றழைக்கப்படும் பழம்பெரும் முருகன் ஆலயத்தின் சுற்றாடலில் மாண்பு நிறைந்த வாழ்வு வாழ்ந்து வந்த மகாதேவன் - தனலட்சுமி தம்பதியினருக்கு வரமாய் வந்தமைந்த மகன் சதீஸ்.

அவனுடைய திடீர்மறைவு அன்புள்ளங்களை மாளாத சோகத்தில் ஆழ்த்தியது. அவரது இழப்ப ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். அந்த அவலம் உறவையும் நட்பையும் மட்டுமன்றி கூடித்தொழில் செய்தவர்கள், சேர்ந்து கல்வி பயின்றவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், என அனைவருக்கும் ஒரு எதிர்பாராத அதிர்ச்சியாகவே அமைந்துவிட்டது.

ஐந்து பிள்ளைகளின் தலைமகனாய், குடும்பத்தின் ஒரேயொரு ஆண்வாரிசாய் விளங்கிய இவர் சிறுவயது முதலே தனது பண்பான நடத்தையாலும், பணிவும் பரிவும் நிறைந்த குணத்தாலும் அனைவரையும் கவர்ந்தவர். ஆசிரியர்களின் நன்மதிப்புக்குரிய மாணவர்களில் அவரும் ஒருவர். சாதாரண தரம் வரையும் மண்டைதீவு மகா வித்தியாலயத்திலும், யாழ் மத்திய கல்லூரியில் பல்கலைக்கழக புகுமுக வகுப்பிலும் கல்வி கற்றவேளையிலும் மாணவர்களுடன் இணக்கமாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கினார்.

இடப்பெயர்வின் பொழுது வன்னிப் பெருநிலத்தில் தந்தையாரை இடைநடுவில் இழந்தபொழுது பள்ளிப்படிப்பு தடைப்பட்டுப் போனது. குடும்பப் பொறுப்பை பொறுப்புடன் ஏற்றுச் செயற்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிகளின் எதிர்கால வாழ்வை மட்டுமே இலட்சியமாகக் கொண்ட இவர் "உதயன்" பத்திரிகை நிறுவனத்தில் கடந்த சில ஆண்டு களாகக் கடமையாற்றி வந்தார். அந்தவேளையில்...... இப்படியொரு துயரம்......

இந்த இளைஞனின் எதிர்காலக் கனவுகளைக் காலனால் சகித்துக் கொள்ள முடியவில்லைப் போலும். அவலமாக எம்மிடமிருந்தும் உயிர் ஒன்று பிரிந்துவிட்டது. அவனது குடும்பத்தவர்களுக்கு அறுதல் கூற வார்த்தைகளைத் தேடுகிறோம் கிடைக்கவில்லை.

"அழகிய கனவொன்று மெல்லக்
கலைந்து கரைந்ததும் விதியா?
ஆழமான துயரும் கண்ணீரும் அவனது
நினைவுகளின் சமாதியில் சங்கமிக்கும்"

இந்த நேரத்தில் அவனுக்காகவும், பேரலைகளில் மறைந்துபோன முகம் தெரியாத உறவுகளின் ஆத்மசாந்திக்காகவும், ஒன்றிணைந்து பிரார்த்திப்போம்.

**சாந்திகொள் சதீஸ்!**

**கை.பேரின்பநாயகம்**
- மண்டைதீவு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாப அலை

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பினனா் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பொற்பதியை வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்தவருமான அமரா் செல்வன் மகாதேவா சதீஸ் அவா்கள் 2004 டிசம்பா் மாதம் 18 ஆம் திகதி அகாலமரணம் எய்தினாா். இவா் நிஜமற்ற காலத்திற்குத் தள்ளப்பட்டதை நினைத்து பேரதிா்ச்சியுற்றேன். "ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்" இந்த நிலையிலே செல்வன் சதீஸ் குடும்பத்திலே குலக் கொடியின் முதல் ஒளிச்சுடராக அவதரித்தாா்.

"முடிசாா்ந்த மன்னரும் வாழ்வின் இறுதியில் ஒருபிடி சாம்பராவது திண்ணம்" இக்கூற்று யாவருக்கும் பொருத்தமே. ஆனால் செல்வன் சதீசின் அகாலமரணம் அழியாத கோலங்கள் ஆகிவிட்டனவே. இவா் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி தொட்டு க.பொ.த சாதாரணதர வகுப்பு வரை படித்து பாீட்சையில் வெற்றிகரமாக சித்தி பெற்று பின்பதாக யாழ்ப்பாணத்து மத்திய கல்லூரியிலே உயா்வகுப்பினை கற்றுக்கொண்டாா். கணிதப் பிரிவிலே தனது கல்வியை மேற்கொண்டாா். இந்நிலையில் உயா்தரப் பாீட்சையின்போது ஒரு சில புள்ளிகளால் பல்கலைக்கழகம் போகமுடியாது போயிற்று. இதரதுறை சாா்ந்த படிப்பினை மேற்கொண்ட காலத்தில் "உதயன்" பத்திரிகை நிறுவனத்தில் கடமைபுரிந்து கொண்டிருக்கும் காலத்திலேயே தென்திசை இறைவனும் தன் ஊருக்கு இழுத்துச் சென்றுவிட்டான். இதனால் "வெந்தபுண்ணில் வேல்பாய்ந்தது போல" இவரது குடும்பத்திற்கு வேதனையும் சோதனையும் ஏற்பட்டுவிட்டது. நான்கு சகோதாிகளுக்கு அண்ணாவான சதீஸ் சின்னவயதிலும் குடும்பத்துப் பொறுப்புக்களைச் சுமந்து வழிநடாத்தி வந்தாா்.

செல்வன் சதீஸ் அவா்களுடைய தந்தையாா் 1996 ஆம் ஆண்டு இறந்துவிட்டாா். குடும்பத்தின் பொறுப்புள்ள தூண் சாய்ந்த பின்னா் செல்வன் சதீஸ் தன்னுடைய வாழ்நாளில் வெள்ளிவிழாக் காலத்தில் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் இறுதிக் காலப்பகுதியின் ஆரம்பகாலத்திலேயே கூற்றுவனும் செல்வன் சதீசை கண்ணெடுத்துக் கொண்டான். பொறுப்பு வாய்ந்த நான்கு சகோதரிகளும் க.பொ.த உயர்தர வகுப்பு தொட்டு பல்கலைக்கழக வகுப்புக்கள் வரை படித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களோ அண்ணாவின் ஈடுசெய்யமுடியாத பிரிவிற்கு ஈடுகொடுப்பார்கள் என்று இறைவனிடம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த வகையிலே மைந்தனைப் பிரிந்து ஆறாத்துயர் கொண்டிருக்கும் அன்னைக்கும், துடியாய்த்துடித்துக் கொண்டிருக்கும் சகோதரரிகளுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் என்னுடைய அனுதாப அலைகளை இரங்கல் வழிநின்று சமர்ப்பணம் செய்கின்றேன்.

**"பரந்தாமன் பதம் பறந்தனையே சதீஸ்"**

**புலவர் சிவா**
**– கொக்குவில் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட அமரர் மகாதேவா சதீஸ்

சப்த தீவுகளில் முதலாவது தீவாகக் காட்சியளிக்கின்றது மண்டைதீவு. பல இந்துக் கோவில்கள், கிறிஸ்தவக் கோவில்கள், அங்கே பக்திமழை பொழிகின்றன. மண்டைதீவு சிறுப்புலம் முத்துக்குமாரசுவாமி கோவில் உரிமையாளர்களின் வழித்தோன்றலாகிய உயர் வேளாள குலத்தில் உதித்த அமரர் மகாதேவா சதீஸ் அவர்கள் இன்று எம்மிடையே இல்லை.

அமரர் மகாதேவா தனலட்சுமி தம்பதிகளின் ஏகபுத்திரனாக, தலை மகனாக 1978.05.28 இல் அவிட்ட நட்சத்திரம் 3ம் பாதம், கும்ப ராசியில், விருட்சிக இலக்கினத்தில் அவதரித்தார்.

"வளரும் பயிரை முளையில் தெரியும், வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்" என்பர் சான்றோர். அமரர் சதீஸ் அவர்களும் கடவுள் பக்தி, கல்வித்திறமை, குருபக்தி, சமூகத்தொண்டு, தன்னம்பிக்கை, பொறுமை, விடாமுயற்சி, ஒழுக்கம், உழைப்பு போன்ற அரிய குணங்கள் நிரம்பியவராக எம்மிடையே வாழ்ந்தார்.

திருக்குறளை நன்கு ஆராய்ந்த அமரர் சதீஸ் அவர்கள் கல்வி கற்றதனால் ஆய பயன் என்? மெய்யறிவினை உடைய இறைவனது திருப் பாதங்களை வணங்காவிடில் கற்றலின் பயன் பெறமுடியுமா? என்ற வினாக்களை எழுப்புவார். காலை, மாலை, பகல் நேரங்களில் நேரங் கிடைத்த போதெல்லாம் திருக்கோவில்களில் அவரைக் காணலாம். இறைவனுக்குப் பூமாலை புனைந்து ஏற்றிப் புகழ்ந்து பாடுவார். நீறில்லா நெற்றி பாழ் என்பார். மந்திரமாவது நீறு என்று அவர் வாய் உச்சரிக்கும்.

கணிதத் துறையைக் கல்வியாகக் கொண்டு முன்னேறியவர். செய்தி ஊடகத் துறையைத் தனது தொழிலாகக் கொண்டு உதயன் பணிமனையில் கடமையாற்றியவர். உதயன் நிர்வாகிகளுடனும், உடன் தொழில் செய்பவர் களுடனும் அன்பும் பாசமும் கொண்டவர். பல்துறைப் புகழ்பெற்ற சுடர் மகேந்திரன் (முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் கீழ்ப் பணியாற்றக் கொடுத்து வைத்தவர். அமரரின் இறுதிக் கிரியைகளில் உதயன் பணியாளர்கள் பங்குபற்றிக் கண்ணீர் மல்கினர். மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரது சகோதரிகளான தர்மினி - கொம்பியூட்டர் - கொழும்பு), ராதிகா - வயம்ப பல்கலைக்கழகம், ரேணுகா - வெளிவாரிப் பட்டப்படிப்பு - வர்த்தகம், அமுதகலா - கலைத்துறை இவற்றில் படித்து முன்னேறுகின்றனர்.

இவர்களின் கல்விக்காக அரும்பாடுபட்டு உதவும் உறவினர் தாய் நாட்டிலும், வெளிநாட்டிலும் இருக்கின்றனர். எனக்கு நேரடியாகத் தெரிந்தவர்கள் அமரர் செல்வராசா, திருமதி சரஸ்வதி செல்வராசா அவர்கள். எனக்குத் தொடர்பில்லாத பல உறவினர்கள் இவர்களது கல்விக்காக உதவத் தயாராக இருக்கிறார்கள்.

அமரர் சதீஸ் அவர்களது அளவுகடந்த இறைபக்திக்குக் காரணம் அவரின் உறவினரான அமரர் சின்னச்சாமி சுவாமிகள். இவர் கடையிற் சுவாமிகளின் பிரதம சீடராவார். முற்பிறவித் தொடர்பு இருக்கலாம். அவரே இவர். இவரே அவர்.

சில நிகழ்ச்சிகள், சில முன்னேற்றங்கள், சில பின்னடைவுகள் ஒருவரின் வாழ்வில் அவரது சாதகப்படி நிர்ணயிக்கப்படுகின்றன.

இவர் குடும்பத்தில் அனேகர் அவிட்டம் 3ம், 4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம் பாதங்களில், கும்ப ராசியில் பிறக்கின்றனர். மோட்சம் அடைகின்றனர். அமரர் சதீஸ் அவர்கள் பிறந்தது அவிட்டம் 3ம் பாதம், அவரின் மோட்சம் 18.12.2004 பகல் 11.00 மணி பூரட்டாதி 1ம் பாதம் கும்பராசி அன்றி அட்டமத்தில் குரு திருவெம்பாவை ஆரம்பநாள். எனவே சிவனே இவருக்கு முத்திநிலை அளித்தான். எப்பவோ முடிந்த காரியம். நாம் ஒன்றும் அறியோம்.

**உடையார் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

சோதிடக் கலாநிதி, பிராஜீனபண்டித
**ஐயாத்துரை சரவணபவன்**
முன்னாள் அதிபர்,
இலங்கை கல்வி நிர்வாக சேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பான சிஷ்யன்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் மகாதேவன் சதீஸ் எனது அன்புக்குரிய மாணவன் ஆவார். தனது குடும்பத்தார் மீது மிகுந்த அக்கறை கொண்டவர். குருபக்திக்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்தவர். அவரது காலடியோசை இன்று நிசப்தமாகிவிட்டாலும் அவரது எண்ணங்கள் என்றும் என் இதயத்திலிருந்து நீங்கா. இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த அவர் வானுறையும் தெய்வத்துள் ஒருவராகிவிட எல்லாம் வல்ல மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திப்பதுடன், அவரை இழந்து பரிதவிக்கும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுகின்றேன்.

**வ.மகேந்திரராசா**
அதிபர்,
யா / ஒஸ்மானியாக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்களும் ....... உங்களுடன்

ஒலியலையில் வந்த சேதி - எம்
கூட்டுப் பறவையொன்றின்
உறவொன்று உதிர்ந்ததாய்....
உண்மையா? ... ஐயோ! பொய்யாகிப்போகாதா?

குரல்வளை குறுகிப் போகிறது....
கண்களை கண்ணீர் திரையிடுகிறது....
உம் புலன்களெலாமொடுங்க....
ஏதும் புரியவில்லை எமக்கிந்த வேளையிலே....

ஆறுதல் சொல்ல வந்தோமிங்கு - ஆனால்
அண்ணனின் அகாலப்பிரிவின் பாதிப்பில்
சிந்தை கலங்கிட .... சீர்வழி தெரியாது....
நாமும் அழுகின்றோம் உங்களுடன்.....

**எம் சக மாணவியான செல்வி ம.ராதிகாவின்**
**அன்புச் சகோதரன்**
**செல்வன் மகாதேவன் சதீஸ்**
**அவர்களின் மறைவுத் துயரிலே நாமும் துயர் பகிர்கின்றோம்.**
**ஓம்சாந்தி! சாந்தி!! ஓம்சாந்தி!!!**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**நண்பர்கள்**
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,
மாக்கத்துற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மகாதேவா சதீஸ்

## அவர்களது மறைவு குறித்த

# கண்ணீர் அஞ்சலி

பண்பிலே பூத்த பாசத்தீபமே
குணத்திலே குன்றாக வாழ்ந்து விட்டீரே
குவலயம் போற்றிடும் மைந்தனாய் நின்றீரே
கல்வியைக் குறைவின்றிக் கற்றீரே
கலங்கவிட்டு இன்று ஏனோ மறைந்தீர்
இதயங்கள் துடிக்க எங்கே சென்றீர்
விண்ணுலகு நோக்கி விரைந்திட்ட உங்களுக்கு
பொன்னுலகு எங்கும் பூ விரிக்கும்

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

**அன்னாரின் ஆத்மாசாந்திக்காகவும்,**
**பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும்**
**எங்கள் ஆழ்ந்த**
**அனுதாபத்தைத்**
**தெரிவித்துக்**
**கொள்கின்றோம்.**

பிரிவாற் துயருறும்
**அயலவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊமை விழிகளும் கனத்த இதயமுமாய்...

பள்ளிப் பருவம் எனும் சோலையிலே

எம்முடன் சிறகடித்துப் பறந்த

எங்கள் அன்பு நண்பா சதீஸ்

வான்வெளியில் வந்த செய்தி

வதந்தியாகாதா என்ற ஏக்கத்தில்

நாமிருந்தோம், உண்மையறிந்த பின்னர்

ஊமை விழிகளும் கனத்த இதயமுமாய்....

**ஓம் சாந்தி! சாந்தீ!! சாந்தி!!!**

**அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும்,**
**பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும்**
**எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்**
**கொள்கின்றோம்**

பிரிவாற் துயருறும்
**பாடசாலை நண்பர்கள்**
மண்டைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருக்கல் வாய்பாடு

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 1 - 1 | 1 - 2 | 1 - 3 | 1 - 4 | 1 - 5 | 1 - 6 | 1 - 7 |
| 2 - 2 | 2 - 4 | 2 - 6 | 2 - 8 | 2 - 10 | 2 - 12 | 2 - 14 |
| 3 - 3 | 3 - 6 | 3 - 9 | 3 - 12 | 3 - 15 | 3 - 18 | 3 - 21 |
| 4 - 4 | 4 - 8 | 4 - 12 | 4 - 16 | 4 - 20 | 4 - 24 | 4 - 28 |
| 5 - 5 | 5 - 10 | 5 - 15 | 5 - 20 | 5 - 25 | 5 - 30 | 5 - 35 |
| 6 - 6 | 6 - 12 | 6 - 18 | 6 - 24 | 6 - 30 | 6 - 36 | 6 - 42 |
| 7 - 7 | 7 - 14 | 7 - 21 | 7 - 28 | 7 - 35 | 7 - 42 | 7 - 49 |
| 8 - 8 | 8 - 16 | 8 - 24 | 8 - 32 | 8 - 40 | 8 - 48 | 8 - 56 |
| 9 - 9 | 9 - 18 | 9 - 27 | 9 - 36 | 9 - 45 | 9 - 54 | 9 - 63 |
| 10 - 10 | 10 - 20 | 10 - 30 | 10 - 40 | 10 - 50 | 10 - 60 | 10 - 70 |
| 11 - 11 | 11 - 22 | 11 - 33 | 11 - 44 | 11 - 55 | 11 - 66 | 11 - 77 |
| 12 - 12 | 12 - 24 | 12 - 36 | 12 - 48 | 12 - 60 | 12 - 72 | 12 - 84 |
| 13 - 13 | 13 - 26 | 13 - 39 | 13 - 52 | 13 - 65 | 13 - 78 | 13 - 91 |
| 14 - 14 | 14 - 28 | 14 - 42 | 14 - 56 | 14 - 70 | 14 - 84 | 14 - 98 |
| 15 - 15 | 15 - 30 | 15 - 45 | 15 - 60 | 15 - 75 | 15 - 90 | 15 - 105 |
| 16 - 16 | 16 - 32 | 16 - 48 | 16 - 64 | 16 - 80 | 16 - 96 | 16 - 112 |

| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|
| 1 - 8 | 1 - 9 | 1 - 10 | 1 - 11 | 1 - 12 | 1 - 13 | 1 - 14 |
| 2 - 16 | 2 - 18 | 2 - 20 | 2 - 22 | 2 - 24 | 2 - 26 | 2 - 28 |
| 3 - 24 | 3 - 27 | 3 - 30 | 3 - 33 | 3 - 36 | 3 - 39 | 3 - 42 |
| 4 - 32 | 4 - 36 | 4 - 40 | 4 - 44 | 4 - 48 | 4 - 52 | 4 - 56 |
| 5 - 40 | 5 - 45 | 5 - 50 | 5 - 55 | 5 - 60 | 5 - 65 | 5 - 70 |
| 6 - 48 | 6 - 54 | 6 - 60 | 6 - 66 | 6 - 72 | 6 - 78 | 6 - 84 |
| 7 - 56 | 7 - 63 | 7 - 70 | 7 - 77 | 7 - 84 | 7 - 91 | 7 - 98 |
| 8 - 64 | 8 - 72 | 8 - 80 | 8 - 88 | 8 - 96 | 8 - 104 | 8 - 112 |
| 9 - 72 | 9 - 81 | 9 - 90 | 9 - 99 | 9 - 108 | 9 - 117 | 9 - 126 |
| 10 - 80 | 10 - 90 | 10 - 100 | 10 - 110 | 10 - 120 | 10 - 130 | 10 - 140 |
| 11 - 88 | 11 - 99 | 11 - 110 | 11 - 121 | 11 - 132 | 11 - 143 | 11 - 154 |
| 12 - 96 | 12 - 108 | 12 - 120 | 12 - 132 | 12 - 144 | 12 - 156 | 12 - 168 |
| 13 - 104 | 13 - 126 | 13 - 130 | 13 - 143 | 13 - 156 | 13 - 169 | 13 - 182 |
| 14 - 112 | 14 - 135 | 14 - 140 | 14 - 154 | 14 - 168 | 14 - 182 | 14 - 196 |
| 15 - 120 | 15 - 144 | 15 - 150 | 15 - 165 | 15 - 180 | 15 - 195 | 15 - 210 |
| 16 - 128 | 16 - 153 | 16 - 160 | 16 - 176 | 16 - 192 | 16 - 208 | 16 - 224 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

ஆசைப்பிள்ளை (அமரர்) + விலாட்சி (அமரர்)

↓

பேரின்பநாதன் (அமரர்) + கமலாதேவி

வாமதேவா

மகாதேவா (அமரர்)

சரஸ்வதிதேவி + செல்வராசா (அமரர்)

தம்பியப்பா (அமரர்) + சின்னம்மா (அமரர்)

↓

கமலாம்பிகை + கைலைநாதர்

நாகலட்சுமி + வைத்திலிங்கம்

தனலட்சுமி

நித்தியலட்சுமி + சிவயோகன்

**சதீஸ்**

தர்மினி

ராதிகா

ரேணுகா

அமிர்தகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



அன்பும் பண்பும் நிறைந்த, எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு
அமரர் மகாதேவா சதீஸ்
அவர்களின் எதிர்பாராத மறைவினால்
எமக்கு ஏற்பட்ட துயரத்தில் பங்குகொண்டு,
ஆறுதல் கூறியவர்கள், தந்தி, தொலைபேசி ஆகியவற்றின்
மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தவர்கள், இறுதிச் சடங்கில்
கலந்துகொண்டவர்கள்,
அனுதாபச் செய்திகளையும், துண்டுப் பிரசுரங்களையும்
வழங்கியவர்கள், அமரரின் மூன்றாம் நாள், அந்தியேட்டி,
வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்துகொண்டவர்கள்,
பல்வேறு வழிகளிலும் உதவி செய்த "உதயன்" பத்திரிகை
நிறுவனத்தினர், இந் நினைவு மலரை ஆக்கியளித்த
தாவடி ஸ்ரீசாயி அச்சகத்தினர் ஆகிய
அனைவருக்கும் எங்கள் இதயம் நிறைந்த
நன்றியினைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

நன்றி.

**உடையார் ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

*Srisaji Offset Printers - Thavady.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47226419661 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org